அ.வ.எண். 8/2015 நாள்: 30.06.2026

பி.சா.1 திரு.ராமதாஸ்

<u>I.A.No. 296/2026 அனுமதிக்குப்பட்டு சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

20) பி.சா.ஆ.8 எந்த ஆவணத்தின் அடிப்படையில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது தகப்பனார் 1986 ம் வருடம் 21 செண்ட் 2 இன சொத்தாக உள்ள சொத்தை திருமதி.சொர்ணத்தம்மாள் அவரிடமிருந்து கிரையம் பெற்ற பத்திரத்தின் அடிப்படையில் எனக்கு எனது தகப்பனாரால் முழுஅதிகாரம் கொடுக்கப்பட்டு அதன் அடிப்படையில் மேற்படி பி.சா.ஆ.8 தாக்கல் செய்துள்ளேன். மேற்படி பி.சா.ஆ.8 ஆவணம் எந்த சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது, அதன் பதிவு எண் என்ன என்றால் கருந்தட்டான்குடி சார்பதிவாளர் அலுவலகம், ஆவண எண் ஞாபகம் இல்லை. 1996–ல் நான் மருத்துவ கல்லூரி சாலையில் குடியிருந்தேன் என்றால் சரிதான். நான் சொர்ணத்தம்மாளிடமிருந்து எனது தகப்பனார் கலியபெருமாள் கிரையம் வாங்கும் போது அரசு பட்டா வழங்கப்பட்டிருந்ததா என்றால் கிரையம் வாங்கும்போது பட்டா இல்லை.

21) நான் மேற்படி பி.சா.ஆ.8–ன் அடிப்படையில்தான் கிரையம் செய்து கொடுத்தேன் என்றால் சரிதான். யார்யாருக்கு அவ்வாறு கிரையம் செய்து கொடுத்தேன் என்றால் வெண்ணிலா மற்றும் அவரது கணவருக்கு கிரையம் செய்து கொடுத்தேன். மேற்படி பி.சா.ஆ.8–ல் எனது கையொப்பம் கிடையாது என்றால் ஞாபகம் இல்லை. பி.சா.ஆ.8 ஆவணத்தை நானே ஆள்மாறாட்டம் செய்து உற்பத்தி செய்து கொண்டேன் என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

S.d/ Ramadoss

Taken down by me in the open court read over to the witness and admitted by him to be correct.

PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.06.30 16:58:50 +0530

DISTRICT MUNSIF, THIRUVAIYARU